பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

20 12 2024 **FRIDAY** **7.15 PM**

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. நாடு முழுவதும் அம்ரித் பாரத் திட்டத்தின்கீழ் மேம்பாட்டுப்பணிகளுக்காக ஆயிரத்து 337 ரயில் நிலையங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக மத்திய அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.
2. பிரதமரின் சூரிய மின்சக்தி இல்ல திட்டத்தின்கீழ், ஆறு லட்சத்து 30 ஆயிரம் வீடுகள் பயனடைந்துள்ளதாக மத்திய அமைச்சர் திரு பிரல்ஹாத் ஜோஷி கூறியுள்ளார்.
3. நாடு முழுவதும் பருத்தி உற்பத்தி செய்யக்கூடிய 12 மாநிலங்களில் 499 கொள்முதல் மையங்கள் ஏற்படுத்தப்பட்டிருப்பதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது
4. மத்திய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகளால், சர்வதேச விளையாட்டுப் போட்டிகளில் இந்தியா அதிக பதக்கங்களை வென்றதாக விளையாட்டுத்துறை இணையமைச்சர் திருமதி **Raksha Khadse** தெரிவித்துள்ளார்.
5. மும்பை சர்வதேச மகளிர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Zeel Desai – Riya Bhatia** இணை இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

*-- இனி விரிவான செய்திகள் ---*

**<<<<<<<>>>>>**

நாடு முழுவதும் அம்ரித் பாரத் மேம்பாட்டுத்திட்டத்தின்கீழ், ஆயிரத்து 337 ரயில் நிலையங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக மத்திய அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

மாநிலங்களவையில் இதனை தெரிவித்த அவர், இந்த திட்டத்தின்கீழ், ஏற்கனவே 157 ரயில் நிலையங்களில் மேம்பாட்டுப்பணிகள் தொடங்கப்பட்டிருப்பதாக கூறினார்.

ரயில்வே கட்டிடங்களை மேம்படுத்துதல், நகரின் அனைத்துப்பகுதிகளையும் ரயில் நிலையங்களுடன் இணைத்தல், பன்முனை வசதிகளை ஏற்படுத்துதல், மாற்றுத்திறனாளிகளுக்கான வசதிகள், போன்றவை இந்த திட்டத்தின்கீழ் அடங்கும் என்று திரு அஷ்வினி வைஷ்ணவ் குறிப்பிட்டார்.

**<<<<<<<>>>>>**

பிரதமரின் சூரிய மின்சக்தி இல்ல திட்டத்தின்கீழ், ஆறு லட்சத்து 30 ஆயிரம் வீடுகள் பயனடைந்துள்ளதாக மத்திய அமைச்சர் திரு பிரல்ஹாத் ஜோஷி தெரிவித்துள்ளார்.

மேற்குவங்கம், பீகார், ஒடிஷா, ஜார்கண்ட் மற்றும் வடகிழக்கு மாநிலங்களில் இந்த திட்டத்தின் செயல்பாடு குறித்து திரு பிரல்ஹாத் ஜோஷி தலைமையில் கொல்கத்தாவில் இன்று ஆலோசனை கூட்டம் நடைபெற்றது.

இதில் பேசிய அவர், சூரிய மின்சக்தி இல்ல திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் மேற்குவங்கம் உள்ளிட்ட சில மாநிலங்கள் பின்தங்கியிருப்பதாக கூறினார்.

இந்த திட்டத்தின்மூலம், மின்சாரத்திற்கு மிக குறைந்த செலவே ஏற்படும் என்றும், இந்த திட்டத்தை அனைத்து மாநிலங்களும் உறுதியுடன் நடைமுறைப்படுத்த வேண்டியது அவசியம் என்றும் திரு பிரல்ஹாத் ஜோஷி வலியுறுத்தினார்.

<<<<<<<>>>>>

மத்திய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகளால், சர்வதேச விளையாட்டுப் போட்டிகளில் இந்தியா அதிக பதக்கங்களை வென்றதாக விளையாட்டுத்துறை இணையமைச்சர் திருமதி **Raksha Khadse** தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், இளைஞர்களின் திறன்களை மேம்படுத்த பிரதமரின் கௌஷல் விகாஸ் திட்டம், தீன் தயாள் உபாத்யாய கிராம கௌஷல் திட்டம் போன்ற திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாக கூறினார்.

இந்த திட்டங்களின் மூலம், லட்சக்கணக்கானோர் பயிற்சி பெற்று வேலைவாய்ப்பு பெற்றுள்ளதாக திருமதி **Raksha Khadse** தெரிவித்தார்.

<<<<<<<>>>>>

பாரத ரத்னா அம்பேத்கரை எந்த அளவுக்கு காங்கிரஸ் கட்சி அவமரியாதை செய்தது என்பது நாடாளுமன்றத்தில் அரசியல் சாசனம் தொடர்பான விவாதத்தின்போது வெளிப்பட்டதாக மத்திய சட்ட அமைச்சர் திரு அர்ஜுன் ராம் மெக்வால் குறை கூறியுள்ளார்.

செய்தி நிறுவனம் ஒன்றுக்கு அளித்த பேட்டியில் இதனை தெரிவித்த அவர், நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் இந்த விவாதம் நடைபெற்றதை சுட்டிக்காட்டினார்.

<<<<<<<>>>>>

நாடு முழுவதும் பருத்தி உற்பத்தி செய்யக்கூடிய 12 மாநிலங்களில் 499 கொள்முதல் மையங்கள் ஏற்படுத்தப்பட்டிருப்பதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

மாநிலங்களவையில் கேள்விநேரத்தின்போது இதனை தெரிவித்த ஜவுளித்துறை இணையமைச்சர் திரு **'Pabitra Margherita '** இந்திய பருத்திக்கழகத்தின் சார்பில் இந்த மையங்கள் அமைக்கப்பட்டுள்ளதாக கூறினார்.

விவசாயிகளிடமிருந்து எந்தவித கட்டுப்பாடுகளும் இன்றி, குறைந்தபட்ச ஆதரவு விலைக்கு பருத்தி கொள்முதல் செய்யப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

இதனிடையே, மற்றொரு கேள்விக்கு பதிலளித்த திரு **'Pabitra Margherita,** கைத்தறி நெசவாளர்கள் மற்றும் தொழிலாளர்களின் நலன்களை பாதுகாக்க மத்திய அரசு உறுதிபூண்டிருப்பதாக தெரிவித்தார்.

தேசிய கைத்தறி மேம்பாட்டுத்திட்டம், நெசவாளர்களுக்கான கச்சாப்பொருட்கள் வழங்கும் திட்டம் போன்ற பல்வேறு திட்டங்களை அரசு செயல்படுத்தி வருவதாக அவர் குறிப்பிட்டார்.

<<<<<<<>>>>>

நடப்பாண்டில் மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத்துறைக்கு மூன்று லட்சத்து 27 ஆயிரம் கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்திருப்பதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

மக்களவையில் இன்று கேள்விநேரத்தின்போது இதனை தெரிவித்த மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத்துறை இணையமைச்சர் திருமதி சாவித்ரி தாகூர், கடந்த ஆண்டை காட்டிலும், இது 37 சதவீதம் அதிகமாகும் என்று கூறினார்.

<<<<<<<>>>>>

உற்பத்தியுடன் இணைந்த ஊக்கத்தொகை வழங்கும் திட்டத்தின்கீழ், ஒரு லட்சத்து 46 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான முதலீடுகள் செய்யப்பட்டுள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

இதன்மூலம், 12 லட்சத்து 50 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான உற்பத்தி செய்யப்பட்டுள்ளதாக தொழில் மற்றும் வர்த்தகத்துறையின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இந்த திட்டத்தின்கீழ், ஆயிரத்து 300-க்கும் மேற்பட்ட உற்பத்திப்பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நேரடி அந்நிய முதலீடு 26 சதவீதமாக அதிகரித்துள்ளது என்றும் அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<<>>>>>

மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன், பட்ஜெட் தொடர்பாக மாநில நிதியமைச்சர்களுடன் இன்று ஆலோசனை மேற்கொண்டு வருகிறார்.

ராஜஸ்தானின் ஜெய்சால்மரில் நடைபெற்ற இந்த ஆலோசனைக்கூட்டத்தில் பல்வேறு மாநிலங்களின் நிதியமைச்சர்கள் பங்கேற்றனர்.

மத்திய பட்ஜெட்டில் இடம்பெற வேண்டிய அம்சங்கள் குறித்து இதில் விரிவாக விவாதிக்கப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<<>>>>>

திருமதி ஷேக் ஹசீனாவை ராஜினாமா செய்ய இந்தியா வலியுறுத்தியதாக பங்களாதேஷ் இடைக்கால அரசு தெரிவித்த சர்ச்சைக்குரிய கருத்துக்கு இந்தியா கண்டனம் தெரிவித்துள்ளது.

புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய வெளியுறவுத்துறை செய்தித்தொடர்பாளர் திரு ரன்தீர் ஜெய்ஷ்வால், இதுபோன்ற கருத்துக்களை எச்சரிக்கையுடன் தெரிவிக்க வேண்டும் என்று கூறினார்.

இந்தியாவின் சார்பில் இதற்கு எதிர்ப்பை பதிவு செய்வதாகவும், சமூக வலைதளத்தில் அந்த கருத்து திரும்பப்பெறப்பட்டதாகவும் திரு ரன்தீர் ஜெய்ஷ்வால் தெரிவித்தார்.

<<<<<<<>>>>>

இந்திய தேசிய லோக்தள கட்சியின் தலைவரும், ஹரியானா முன்னாள் முதலமைச்சருமான ஓம் பிரகாஷ் சௌதாலா, குருகிராமில் இன்று காலமானார். அவருக்கு வயது 89.

கடந்த சில நாட்களாக உடல் நலக்குறைவு காரணமாக சிகிச்சை பெற்று வந்த அவர், மாரடைப்பால் இன்று உயிரிழந்ததாக அக்கட்சியின் செய்தித்தொடர்பாளர் தெரிவித்தார்.

ஓம் பிரகாஷ் சௌதாலா மறைவுக்கு பிரதமர் திரு நரேந்திர மோடி மற்றும் பல்வேறு அரசியல் தலைவர்கள் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

பிரதமர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், பல ஆண்டுகளாக மாநில அரசியலில் தீவிர பங்காற்றிய ஓம் பிரகாஷ் சௌதாலாவின் மறைவு, ஆழ்ந்த வருத்தத்தை அளிப்பதாகவும், அவரது மறைவால் வாடும் குடும்பத்தினருக்கும், ஆதரவாளர்களுக்கும் இரங்கலை தெரிவித்துக் கொள்வதாகவும் கூறியுள்ளார்.

<<<<<<<>>>>>

இந்திய ராணுவத்திற்கு **‘K-9 ’** வஜ்ராத் ரக அதிநவீன துப்பாக்கிகளை கொள்முதல் செய்வதற்காக, **‘L & T** நிறுவனத்துடன், 7 ஆயிரத்து 629 கோடி ரூபாய் மதிப்பிலான ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்டுள்ளது.

புதுதில்லியில் இன்று பாதுகாப்புத்துறை செயலாளர் திரு ராஜேஷ் குமார் முன்னிலையில், இதற்கான ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்டதாக பாதுகாப்பு அமைச்சகத்தின் அறிக்கை தெரிவிக்கிறது.

நவீன ரக ஆயுதங்கள் பெறப்படுவதன் மூலம், இந்திய ராணுவம் அனைத்து விதமான தயார் நிலைக்கும் உள்ளதை உறுதி செய்வதாக அமையும் என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<<>>>>>

மகாராஷ்ட்ரா மாநிலம் ராய்காட் மாவட்டத்தில் இன்று காலை நேரிட்ட சாலை விபத்தில், ஐந்து பேர் உயிரிழந்தனர். 17 பேர் காயமடைந்தனர்.

**Tamhini Ghat** என்ற பகுதியில் சென்ற பேருந்து ஓட்டுநரின் கட்டுப்பாட்டை இழந்து சாலையோரம் இருந்த பள்ளத்தில் கவிழ்ந்ததில் இந்த விபத்து ஏற்பட்டதாக காவல்துறையினர் தெரிவித்தனர்.

இதற்கிடையே, ராஜஸ்தான் மாநிலம் ஜெய்ப்பூர் - அஜ்மீர் நெடுஞ்சாலையில் எரிவாயு டேங்கரும், லாரியும் மோதி ஏற்பட்ட தீ விபத்தில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 11-ஆக அதிகரித்துள்ளது. இதில் 30-க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.

இந்த விபத்து குறித்து ராஜஸ்தான் முதலமைச்சர் திரு பஜன்லால் சர்மாவுடன் தொலைபேசியில் தொடர்புகொண்டு பேசிய பிரதமர் திரு நரேந்திர மோடி, விபத்து மற்றும் மீட்பு பணிகள் குறித்து கேட்டறிந்தார்.

மேலும், இந்த விபத்தில் உயிரிழந்தோர் குடும்பத்தினருக்கு, பிரதமரின் தேசிய நிவாரண நிதியிலிருந்து தலா இரண்டு லட்சம் ரூபாயும், காயமடைந்தவர்களுக்கு தலா 50 ஆயிரம் ரூபாயும் நிதியுதவி வழங்க உத்தரவிட்டிருப்பதாக சமூக வலைதளத்தில் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

**<<<<<<<>>>>>**

*விளையாட்டுச் செய்திகள்*

மும்பையில் நடைபெற்றவரும் சர்வதேச மகளிர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Zeel Desai – Riya Bhatia** இணை இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

மகளிர் இரட்டையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் இந்த இணை, 6-3, 3-6, 10-5 என்ற செட் கணக்கில், இந்தியாவின் **Shrivalli Rashmikaa Bhamidipaty** – கஜகஸ்தானின் **Zhibek Kulambayeva** இணையை வென்றது.

-----------

ஆசிய இளையோர் பளுதூக்கும் சாம்பியன் போட்டியின் முதல் நாளில் இந்தியா 2 தங்கம், ஒரு வெள்ளி, ஒரு வெண்கலப்பதக்கம் வென்றது.

தோஹாவில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் மகளிர் 45 கிலோ எடைப்பிரிவில் **Payal** 2 தங்கப்பதக்கங்களையும், ஒரு வெண்கலப்பதக்கத்தையும் வென்றார்.

**Preetismita Bhoi** வெள்ளிப்பதக்கம் வென்றார்.

---------------

மும்பை சர்வதேச ஸ்குவாஷ் போட்டியில், இந்தியாவின் **Akanksha Salunkhe** அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் அவர், 11-5, 11-4, 11-3 என்ற செட் கணக்கில், ஹாங்காங்கின் **Sze Wing Wai** –ஐ வென்றார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் **Veer Chotrani** - இலங்கையின் **Ravindu Laksiri**-ஐ வென்று அரையிறுதிக்கு தகுதி பெற்றுள்ளார்.

<<<<<<<END>>>>>